

**SAKTHI FOUNDATION - Uni5 EDUCATION**

**Topic: Teachers' day celebration -** ஆசிரியர் தின விழா

**[This article is the talk given by Dr.Madeswaran.M to grade 5 children in Vruksha Montessori School -Madras on Teachers' day, 2012]**

---

இரவு பத்து மணிக்கு மேல் இதோ நம் பள்ளிக்கு நாம் எல்லோரும் வருகிறோம். ஒரே இருட்டு! மின்சாரம் வேறு இல்லை! நான் சொல்கிறேன், ”விஷால்! மேலே போய் நம் தமிழ் வகுப்பறைக்குள் இருக்கும் பொருட்களைப் பார்த்து ஒரு பட்டியல் எழுது.”

விஷால், ”சார்! அது எப்படி முடியும்? அதுவும் இந்த இருட்டில்? மின்சாரமும் இல்லையே!”

அப்போது நான் ஒரு டார்ச் லைட் அடித்து உதவுகிறேன். விஷால் ஒவ்வொரு பொருளாகப் பார்க்க ஆரம்பித்துப் பட்டியல் இடுகிறான்.

அது போலத் தான் ஆசிரியர் என்பர் நமக்குத் தெரியாத பல விஷயங்களைத் தெரிய உதவுகின்றார்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியவில்லை என்றால் எப்படி இருக்கும்?

மாணவர்கள் சில வினாடிகள் யோசித்து ”ஹேோ” என்று கத்தினர்.

ஹேமா, ”சார்! உலகில் எதையுமே ஒழுங்காகச் செய்ய முடியாது!”

அதனால் தான் குறைந்த பட்சம் எழுதவும் படிக்கவும் அடிப்படைக் கணக்குப் போடவும் மனிதன் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று ஔவையார் கூறினார். அவற்றைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரை இறைவன் என்றும் போற்றினார்.

”எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்!” - ஔவை.

உங்கள் அம்மா உங்களைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்து, உடலை வளர்த்துப் பிறக்கச் செய்தார்.

உங்கள் அப்பா உங்களுக்கு உயிர் தந்தார். பிறந்த பின் தன் உழைப்பின் மூலம் சம்பாதித்து நல்ல வீடு, உணவு, உடை, படிப்பு ஆகியன தருகிறார்.

அப்பாவும் அம்மாவும் எனவே நமக்கு முதல் மரியாதைக்கு உரியவர்கள். அவர்கள் மூலம் நீங்கள் எங்களிடம் வருகிறீர்கள். நாங்கள் உங்களுக்கு அம்மாவாகவும் அப்பாவாகவும் அறிவு தரும் குருவாகவும் இருக்கிறோம்.

அதனால் தான் மாதா-பிதா-குரு என்று வைத்தார்கள்.

மாத்ரு தேவோ பவ!
பித்ரு தேவோ பவ!
ஆச்சார்ய தேவோ பவ!

என்றும் போற்றுகிறோம்! அதனால் தான் நம் கடவுள்களும் குருவடிவில் உள்ளனர். தக்ஷிணாமூர்த்தி, க்ருஷ்ணன், முருகன், மஹாசரஸ்வதி, ஸ்ரீஹயக்ரீவர் ஆகியோர் குருவடிவில் உருவகம் செய்யப் பட்டனர்.

அப்போது இடையில் குமார் ஓணம் பண்டிகை பாடத்துடன் இணைத்து ஒரு அற்புதமான கேள்வி கேட்டான். "சார்! நாங்கள் சுக்ராச்சார்யாருக்கு மாணவரா? இல்லை ப்ருஹஸ்பதிக்கு மாணவரா?"

என் பதில், "நான் உங்களுக்கு நல்லதைச் சொல்லிக் கொடுக்கும் ப்ரஹஸ்பதி தானே?"

"ஆமாம்! ஆமாம்!" என்று ஆமோதித்தனர் மாணவர்கள். அப்போது மேற்கொண்டு குமார் கேட்கிறான்,

"சார்! தீவிரவாதிகளுக்கு உள்ள குரு சுக்ரன் அல்லவா?"

என்ன **interconnection** இவனுக்குள் ஏற்பட்டுள்ளது என்று வியக்கிறேன்!

உண்மையோ உண்மை! எனவே இந்த நாளில் நீங்கள் காலை முதல் எங்களை விதவிதமாக வரவேற்றுக் கொண்டாடுவதனால் உங்களின் **SAL ENERGY**

அதிகரிக்கிறது.

இதை எல்லாம் உணர்ந்து தான் Dr. S.ராதாக்ருஷ்ணன் தன் பிறந்தநாளை ”ஆசிரியர் தினம்” என்று கொண்டாட ஏற்பாடு செய்தார்.

அம்மாவும் அப்பாவும் ஆசிரியரும் உன் வாழ்க்கையில் ஒவ்வொரு செயலிலும் இருக்கிறார்கள்! இந்த நாளை நீங்கள் சந்தோஷமாகக் கொண்டாடுங்கள்!

நன்றி!

We dedicate this article to all our teachers.
OM SAKTHI!
Madras, September, 5th-2012.